THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.31/2019**

Deposition of PW.2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **12.08.2022.**

Evidence Recorded Time: 12.26 P.M. to 12.45 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பிரபாகரன்** | Caste | : | |
| S/o & W/o. | : | செல்லசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**<u>முதல் விசாரணை</u>:-**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். மனுதாரரின் மகன் ரூபன் ரெக்ஸ் என்பவர் என்னிடம் வேலை பார்த்தார். மேற்படி ரூபன் ரெக்ஸ் சாலை விபத்தில் இறந்தவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.11 நான் வழங்கியதுதான். தற்போது என்னிடம் வெல்டராக வேலை பார்க்கும் நபர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக ரூ.1,200/- கொடுத்து வருகிறேன்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

நான் மேட்டூரில் உள்ள நால்ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பேப்ரிகேசன் தொழில் செய்து வருகிறேன். எனக்கு வரும் ஆடரின் கீழ் நவப்பட்டியில் குரு கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் வெல்டிங் தொழில் செய்து வருகிறேன். கதவு, ஜன்னல் போன்றவைகளும் வெல்டிங் செய்து வருகிறேன். என்னுடைய கடை பதிவு செய்யப்பட்டுள்ளது. கடை பதிவு சான்றிதழை கொண்டு வரவில்லை. என்னுடைய கடையில் அக்கவுண்ட் சம்மந்தமான கணக்கு புத்தகங்களை பராமரிப்பது இல்லை. வாரம் தோறும் சம்பளம் கொடுப்போமா அல்லது தினசரி சம்பளம் கொடுப்பதும் உண்டு, வார சம்பளமும் கொடுப்பது உண்டு. என் கடையில் மொத்தம் ஐந்து நபர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். எனக்கு வரும் ஆர்டரின் அடிப்படையில்தான் வேலை செய்து வருகிறேன். நான் கடை நடத்தி வருவதற்கான கணக்கு புத்தங்கள் எதுவும் கிடையாது,

அனைத்தும் வாய்மொழியாகத்தான் செய்து வருகிறேன். வருமான வரி எதுவும் கட்டவில்லை, பான் அட்டை உள்ளது. பான் அட்டைக்கான நகலை கொண்டு வரவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு தான் பான் அட்டை பதிவு செய்தேன். வருமான வரி தாக்கல் செய்தற்கான படிவம் எதுவும் கொண்டுவரவில்லை. இறந்துபோன ரூபன் ரெக்ஸ் என்னிடம் வேலைபார்த்தற்கான ஆதாரங்கள் எதுவும் என்னிடம் இல்லை. சம்பளம் கொடுத்தற்கான ஆதாரங்களும் என்னிடம் இல்லை. இறந்துபோன ரூபன் ரெக்ஸ் மாதம் தோறும் சம்பளம் பெறுவார், அவர் என்னிடம் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார். ம.சா.ஆ.11 நான் வழங்கியது என்றால் சரிதான். ரூபன் ரெக்ஸுக்கு மாதம் ரூ.24,000/- சம்பளம் கொடுத்து வந்தேன். ஆனால் அதற்கான ஆதாரங்கள் இல்லை. ம.சா.ஆ.11 லெட்டர் பேடு எங்களிடம் உள்ளது. மனுதாரர் என் மகன் என்ன சம்பளம் பெற்றுவந்தானோ அதை எழுதி தரும்படி கேட்டார் அதனால் கொடுத்தேன். இறந்து போன ரூபன் ரெக்ஸுக்கு பணம் கொடுத்தது சம்மந்தமான வரவு செலவு கணக்குகள் எதுவும் இல்லை என்றாலும் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக இறந்துபோனவருக்காக தவறான சம்பள சான்றை வழங்கினேன் என்றால் சரியல்ல. பணிபுரியும் அனைவருக்கும் சம்பளம் மாறுபடும். ெ ஹல்பருக்கு தின சம்பளமாக ரூ.500/- வீதம் சம்பளம் கொடுத்தேன். ரூபன் ரெக்ஸ் வேலைக்கும் வந்த சமயம் ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.700/- கொடுத்தேன். அவர் வேலைக்கு சேரும்போதே வெல்டராகத்தான் சேர்ந்தார். மனுதாரருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.